**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 4101/ஆ5/2024, நாள்.23/10/2024**

.....

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு – 1330 குறட்பாக்களையும் ஒப்புவிக்கும் மாணவர்களுக்கு ரூ.15,000/– பரிசுத்தொகையும் பாராட்டுச்சான்றிதழும் வழங்குதல் – பள்ளி மாணவ / மாணவியர்கள் போட்டியில் பங்கு பெறுதல் – தொடர்பாக |
| பார்வை | வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.382/2024, நாள். .10.2024 |

.....

பார்வையில் காணும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்திற்கிணங்க மாணாக்கர்கள் இளம் வயதிலேயே மனப்பாடம் செய்தால் அவை பசுமரத்தாணிபோல் பதிந்து, நெஞ்சில் நிலைத்து அவர்களது நல்வாழ்க்கைக்கு வழிகாட்டுவதோடு இளம்வயதில் பெறுகின்ற கல்வியறிவோடு, நல்லொழுக்கம் மிக்கவர்களாக மாணவர்கள் உருவாக வழிவகுக்கும் என்பதால் திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவச் செல்வங்களுக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவது, மாணாக்கர்களின் நல்வாழ்வுக்குத் துணை நிற்பதாகவும், திருக்குறள் நெறி பரவ வழிவகுப்பதாகவும் அமையும். இதனைக் கருத்தில் கொண்டு, 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் மாணாக்கர்களுக்கு திருக்குறள் முற்றோதல் பரிசுத்தொகையாக ரூ.15,000/–ம் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பட்டு வருகிறது.

அரசு / அரசு உதவிபெறும் / தனியார் உள்ளிட்ட அனைத்து பள்ளிகளிலும் 1 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு திருக்குறள் முற்றோதல் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவது அவசியமாகிறது. இத்திட்டம் திறன்மிக்க மாணாக்கர்களை சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் வேலூர் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் அனைத்து தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளிகளின் முதல்வர்கள் 2024–2025ம் ஆண்டிற்கான திருக்குறள் முற்றோதல் போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணாக்கர்களை கண்டறிந்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து 30.10.2024க்குள் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக அ பிரிவு கட்டிடம், நான்காம் தளத்தில் அமைந்துள்ள தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்திலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அளிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 0416–2256166 என்ற தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம். பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டங்களிலும் மாணவர்களின் வழியே பெற்றோருக்கும் இது தொடர்பில் விழிப்புணர்வு அளிக்கப்பெறும் வகையில் தலைமையாசிரியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிடுமாறு தெரிவிக்கப்படுகிறது.

எனவே, 1 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்கள் திருக்குறள் முற்றோதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளுக்கு 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் தகுதிபெற்ற மாணாக்கர்களை விண்ணப்பிக்க பள்ளிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பி வைக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு பெறுவதற்கான விதிமுறைகள்**

- 1330 திருக்குறட்பாக்களையும் முழுமையாக ஒப்புவிக்கும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- இயல் எண், பெயர், அதிகாரம் எண், பெயர், குறள் எண், பெயர் போன்றவற்றை தெரிவித்தால் அதற்குரிய திருக்குறளைக் கூறும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- திருக்குறளின் பொருள், அதன் அடைமொழிகள், திருவள்ளுவரின் சிறப்புப்பெயர்கள், திருக்குறளின் சிறப்புகள் ஆகியவற்றை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
- வேலூர் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் பள்ளியில் பயில்பவராக இருத்தல் வேண்டும். அரசு / அரசு உதவிபெறும் / தனியார் / பதின்மப் பள்ளிகள் போன்ற பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்கள் பங்கு பெறலாம்.
- தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறும் இப்பரிசினை ஏற்கனவே பெற்றவராக இருத்தல் கூடாது.
- திருக்குறளின் பொருளும் அறிந்திருப்பின் கூடுதல் தகுதியாகக் கருதப்பெறும்.

இணைப்பு – விண்ணப்ப படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை/ தனியார்/ தொடக்கப்பள்ளி),
வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

நகல்:

1. வேலூர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பலாகிறது.
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அனைத்து அரசு / அரசு உதவிபெறும் தொடக்க / நடுநிலை /
   உயர்நிலை / மேல்நிலை பள்ளிகள், மற்றும் தனியார் பள்ளிகள்.
   வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)

# திருக்குறள் முற்றோதல் பரிசுத்தொகை கோரும் விண்ணப்பம்

| | | |
|---|---|---|
| 1 | மாணவரின் பெயர் | : |
| 2 | பிறந்த நாள்/வயது/பாலினம் | : |
| 3 | தந்தை/தாய்/பாதுகாவலர் பெயர் | : |
| 4 | தற்போது பயிலும் கல்வி/வகுப்பு | : |
| 5 | பயிலும் பள்ளி/கல்லூரி முகவரி/மாவட்டம்/தொலைபேசி எண் | : |
| 6 | நிலையான இல்ல முகவரி | : |
| 7 | தொடர்பு முகவரி (வட்டம், மாவட்டம் அஞ்சல் குறியீட்டு எண். தொலைபேசி/செல்பேசி எண்ணுடன்) | : |
| 8 | 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்பவரா? ஆம்/இல்லை | : |
| 9 | இதற்கு முன்னர் குறள் பரிசுத்தொகை திங்கள்தோறும் ரூ.1000/- வீதம் அல்லது ஒட்டுமொத்தத் தொகை ரூ.5000/-, ரூ.10,000/- பெறப்பட்டிருப்பின் அது பற்றிய விவரம் (அரசாணை எண்/நாள்) | : |
| 10 | தெரிவிக்க விரும்பும் பிற தகவல்கள் (தனியே இணைக்கப்படலாம்) | : |
| 11 | பள்ளி / கல்லூரி படிப்புச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ள விவரம் | : |

## உறுதிமொழி

திருக்குறள் முற்றோதல் செய்தமைக்குக் குறள் பரிசுத்தொகையாக திங்கள்தோறும் ரூ.1000/- வீதமோ அல்லது ஒட்டுமொத்தமாகவோ இதற்கு முன்னர் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகப் பெறப்படவில்லை என உறுதி கூறுகிறேன்.

பெற்றோர் / பாதுகாவலரின் ஒப்பம்

மாணவரின் ஒப்பம்

# படிப்புச் சான்று

செல்வி / செல்வன் ------------------------------------------------------------------------என்பவர் ---------------------------

------------------------------------------------------------------------------------------------------ பள்ளியில் -------------------------------

- ஆம் வகுப்பு பாடப்பிரிவில் பயின்று வருகிறார் எனச் சான்றிளிக்கப்பெறுகிறது.

தலைமை ஆசிரியர் ஒப்பம்